செய்தி வெளியீடு எண்:827 நாள்:02.10.2008

## செய்தி வெளியீடு – 2.10.2008

## சென்னை மாநகரில் கதீட்ரல் சாலையில் அமையவிருக்கும் தாவரவியல் பூங்கா !

## முதலமைச்சர் கலைஞர் மாதிரி வடிவமைப்புகளை பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார்!

சென்னை மாநகரில் கதீட்ரல் சாலையில் தமிழக அரசுக்குச் சொந்தமாக உள்ள 20 ஏக்கர் நிலப் பரப்பில் உலகத் தரம் வாய்ந்த தாவர இயல் பூங்கா ஒன்றினை சென்னை மாநகர மக்களின் தேவைக்காகவும், சுற்றுச் சூழல் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்திடவும் அமைத்திட தமிழக அரசு ஏற்கனவே முடிவு செய்துள்ளது.

இந்த பூங்காவிற்கான மாதிரியை வடிவமைத்திட வல்லுனர்களின் கருத்துகளை பெறுவதற்காக, மாதிரி வடிவ ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் மூலம் கோரப்பட்டது. அதன்படி, ஒப்பந்தப் புள்ளி அளித்த மூன்று நிறுவனங்களில் தொழில் நுட்பத் தகுதியின் அடிப்படையில்,

1. திருவாளர்கள் குவாட்ரா ருக்சா, சென்னை
2. திருவாளர்கள் ராஜேந்திரா அசோசியேட்ஸ், சென்னை

ஆகிய இரண்டு நிறுவனங்கள் தகுதி பெற்றுள்ளன

தாவரவியல் பூங்கா அமைப்பதற்காக இந்த இரண்டு நிறுவனங்களாலும் உருவாக்கப்பட்டுள்ள மாதிரி வடிவமைப்புகளைக் கணினி வழிக் காட்சியின் மூலம் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2.10.2008 அன்று தலைமைச் செயலகத்தில் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு ஆற்காடு நா.வீராசாமி அவர்கள், மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு ஏ.வ.வேலு அவர்கள், தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித் துறையின் முதன்மைச் செயலர் திரு கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., வேளாண்மைத் துறைச் செயலர் திரு சுர்ஜித் கே.சௌத்ரி, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திரு கே. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., தோட்டக் கலைத் துறை இயக்குநர் டாக்டர் பி.சந்திரமோகன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * *

**வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**